**கிழக்கு மாகாண, மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3-I(இ)தரத்திற்கு மாவட்ட ரீதியாக உயர் தேசிய டிப்ளோமாதாரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2020**

கிழக்கு மாகாணத்தின், மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை, 3-I(இ) தரத்துக்கு மாவட்ட ரீதியாக உயர் தேசிய டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தகைமைகளையுடைய கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2020.10.08** ஆகும். இப் போட்டிப்பரீட்சை, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பின்னர் விரைவில் கிழக்கு மாகாணத்தின் நான்கு நகரங்களில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நடாத்தப்படும்.

**2. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்:**

2.1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளுக்கும் அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.2. இப் பதவிக்கான ஆட்சேர்ப்பானது மாவட்ட அடிப்படையில் செய்யப்படுவதனால் 10 ஆண்டுகள் முடிவடையும் வரை மாவட்டத்திற்கு அல்லது மாகாணத்திற்கு வெளியே இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என்பதோடு இடமாற்றத்தினைக் கோருவதற்கு எவ்வகையிலும் உரிமையில்லை. இது தொடர்பில் சேவை ஒப்பந்தமொன்றினை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் செய்து கொள்வதற்கு உடன்படுதல் வேண்டும்.

2.3. தற்போது இலங்கை ஆசிரியர் சேவையில் இணைக்கப்பட்டுள்ளவர்களின் விண்ணப்பப்படிவங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் அவ்வாறு விண்ணபித்தல் தவறொன்றாக கருதப்படும்.

2.4. மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள தற்போது அரச / கிழக்கு மாகாண சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பிப்பதாயின் திணைக்களத்தலைவரூடாக விண்ணப்பித்தல் வேண்டும். மேலே குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உடன்பட்டிருத்தல் வேண்டும். திணைக்களத்தலைவரினால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து, இது அவர்களது புது நியமனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

**3. தகைமைகள்:**

3.1. **பொதுவான தகைமைகள் :**

3.1.1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3.1.2. சிறந்த நல்லொழுக்கமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

3.1.3. அனைத்து விண்ணப்பதாரர்களும் சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும் என்பதோடு கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்ற தகுதியுடையவராயிருத்தல் வேண்டும்.

3.1.4. விண்ணப்ப முடிவுத்திகதியான **2020.10.08** ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3.1.5. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னதாக அவர் மூன்று (03) வருடத்திலிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி வரையான காலப்பகுதியில் தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :** விண்ணப்பதாரிகள் வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக தொடர்ச்சியாக 03 வருடங்கள் அதாவது 2017,2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களுக்காக பெற்றுக்கொண்டுள்ள தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ்களுடன் பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழையும் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

3.2. **கல்வித் தகைமைகள் :**

3.2.1 2020.10.08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தில் (SLIATE) பெற்றுக்கொள்ளப்பட்ட உயர் தேசிய ஆங்கில டிப்ளோமாவுடன் (HND in English) கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமையினையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

i. க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று (3) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (புதிய பாடத்திட்டத்தின்கீழ் நடைபெறும் பொது ஆங்கிலம் மற்றும் பொதுப்பரீட்சை என்பன க.பொ.த. (உ/த) பரீட்சையின் ஒரு பாடமாக கருதப்படமாட்டாது.)

**அத்துடன்**

ii. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட 3 பாடங்களில் திறமைச்சித்தியுடன் தாய்மொழி மற்றும் கணித பாடங்கள் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா சான்றிதழின் பிரதி அத்துடன் க.பொ.த (உ/த) மற்றும் க.பொ.த (சா/த) பெறுபேற்றுத்தாளின் பிரதிகள் சான்றுறுதிப்படுத்தப்பட்டு, விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் கட்டாயமானதாகும். அவ்வாறு சான்றுறுதிப்படுத்தப்பட்டு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதோடு, இது தொடர்பாக பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடு எதுவும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.**

**கவனத்திற்கு:- அனைத்து விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் 2020.10.08 அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்**

**4. ஆட்சேர்ப்பு முறை :**

4.1. இந்த அறிவித்தலுக்கு அமைவாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்காக, கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் எழுத்துமூலப் போட்டிப்பரீட்சை நடாத்தப்படும். இந்த எழுத்துமூலப் போட்டிப்பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளில் மாவட்ட ரீதியாக நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படி, கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தீர்மானிக்கும் எண்ணிக்கையிலானோர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர் (நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது). நேர்முகப்பரீட்சையில் ஆட்சேர்ப்பிற்கான தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களை சமர்ப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பிரயோகப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். எழுத்துமூலப் போட்டிப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் மற்றும் பிரயோகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமை வரிசை ஒழுங்கின்படி காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக மாவட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

4.2. ஆட்சேர்ப்பின்போது கிழக்கு மாகாணத்தில் வதியும் விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டமானது நியமனத்தின்போது முதலாவதாக கருத்தில் கொள்ளப்படும். அம்மாவட்டத்தில் வெற்றிடங்களை முழுமையாக நிரப்பிய பின்னர், வேறொரு மாவட்டத்தில் வெற்றிடம் காணப்படுமிடத்து, விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ''**விண்ணப்பிக்கும் மாவட்டம்**'' என்ற பகுதியில் குறிப்பிடும் மாவட்டங்களின் முன்னுரிமை வரிசை ஒழுங்கின்படி நியமனம் வழங்குவதற்கு கருத்தில் கொள்ளப்படுவர்.

4.3. அரச நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் ஆங்கில டிப்ளோமாதாரர்கள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I(இ) தரத்திற்கு நியமிக்கப்படுவர். இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 25.02.2016 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 03/2016 இற்கு அமைவாக இருக்கும் என்பதோடு இந்த நியமனத்திற்கான சம்பள முறைமை GE-1-2016 சம்பள வகுதியின் கீழ் மாதாந்தம் ரூபா. 27,740 – 300 x 6 – 380 x 7 – 445 x 2 – ரூபா. 33,090/- ஆகும். இச்சம்பள அளவுத்திட்டத்தின் 7 ஆவது படிநிலையில் அமர்த்தப்படுவர்.

4.4. அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் என்பதுடன் தகுதியற்றவர்களின் விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

4.5. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்பதோடு பதவியுயர்வுகள் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைவாக மேற்கொள்ளப்படும். அதேபோன்று இந்த அறிவித்தலில் கருத்தில் கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அந்த காரணம் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்புடையதாகும்.

## 5. விண்ணப்பிக்கும் முறை :

5.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 4.3 வரை முதலாம் பக்கத்திலும், இல. 5.0 தொடக்கம் 10.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

5.2. **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ஒட்டப்படாதவையும் உரிய விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5.3. இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சத்தியப்பிரமாண ஆணையாளர், பரீட்சார்த்தியின் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, ரூபா. 292,080/- ஆண்டுச்சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரச அல்லது மாகாண சேவைச்சேர்ந்த நிரந்த பதவிநிலை உத்தியோகத்தர், முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். **அரச / கிழக்கு மாகாண சேவையிலுள்ள அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின்,** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

5.4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2020.10.08**ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி, திருகோணமலை

5.5. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/2020/01/HNDE** என்பதை குறிப்பிடுவதோடு **"கிழக்கு மாகாண ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்காக உயர் தேசிய டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் – 2020"** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

5.6. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், தவறின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்கு அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளல் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது.

## 6. பரீட்சைக்கு தோற்றுதல்:

6.1 பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

6.2 பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி இந்த விளம்பரத்தின் 5.3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக அனுமதி அட்டையில் தனது கையொப்பம் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

6.3 பரீட்சையினை நடத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அந்த விதிமுறைகள் மீறப்படுமிடத்து கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

குறிப்பு : **பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என கருதப்படலாகாது என்பதுடன், தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்படாது பரீட்சைக்கு தோற்றுதல் தவறொன்றாக கருதப்படும்.**

## 07. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :

தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

**08. பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சை முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம்.

**09. பரீட்சை முறையும் பரீட்சை மொழி மூலமும் :**

இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் நடாத்தப்படும். அதில் சிங்கள மொழிமூலமான பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்தோர் சிங்கள மொழிமூலமும் , தமிழ் மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்தோர் தமிழ் மொழி மூலமும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**9.1 எழுத்துப்பரீட்சை :**

இந்தப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள் இரண்டாகும். இந்த இரண்டு வினாப்பத்திரங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களை கொண்டமைந்ததாகக் காணப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த இரு வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் கட்டாயமானதாகும். பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**01.** உளச்சார்பு – காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

பரீட்சார்த்தி கொண்டுள்ள ஆசிரியத் தொழிலுக்கான திறமையினையும் தர்க்க ரீதியான சிந்தனை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை அளவீடு செய்யும் நோக்கில் இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை அளிக்கும் வகையில் 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**02.** பொது அறிவு – காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

ஆசிரியத்துறைக்கு இயைபுடைய அந்தத்துறை தொடர்பான பொது அறிவு அத்துடன் / அல்லது தேசிய ரீதியில் இடம்பெற்ற மற்றும் இடம் பெறுகின்ற கல்வியின் போக்கு சம்பந்தமான பொது அறிவு மற்றும் கல்வியினை நவீனமயமாக்கல் சம்பந்தமான பொது அறிவினைப் பரீட்சிப்பதற்காக பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை அளிக்கும் வகையில் 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**9.2 பிரயோகப்பரீட்சை :**

9.2.1. நேர்முகப்பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப்பரீட்சைக்காக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் 05 நிமிட சமர்ப்பிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

9.2.2. **இந்த சமர்ப்பித்தலானது ஆங்கில மொழி மூலம் மட்டும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.**

| **பிரயோக பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள்** | **உயர்ந்த பட்ச புள்ளி அளவு** | **சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு** |
|---|---|---|
| 01 நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 ஆளுமை மற்றும் நிர்வாகம் | 05 | 02 |
| 03 தொடர்பு சாதனம் தொடர்பிலான விளக்கம் | 05 | 02 |
| 04 நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 சமர்ப்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | **25** | **10** |

9.3 பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படும்.

**10. பரீட்சைக்கட்டணம் :**

பரீட்சைக்கட்டணம் ரூபா. 500/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டுகள் ஒட்டப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. **அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

11. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :

| நகரம் | நகர எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|---|
| திருகோணமலை | 01 | அம்பாறை | 03 |
| மட்டக்களப்பு | 02 | கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

12. நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

13. தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

14. இந்த அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பிலும், ஏதாவது விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அல்லது பரீட்சையினை இரத்து செய்வதற்கும் அது தொடர்பான இறுதி முடிவும், இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும் கிழக்கு மாகாண கௌரவ அளுநர் / பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவுரைக்கமைய நியமன அதிகாரியினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

**எம்.வை. சலீம்**,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

16/09/2020

**EX/Rec/2020/01/HNDE**

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிழக்கு மாகாண, மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3-I(இ)தரத்திற்கு மாவட்ட ரீதியாக உயர் தேசிய டிப்ளோமாதாரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2020**

***பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :***
தமிழ் - **T,** சிங்களம் - **S**
(உரிய எழுத்தினை கூட்டினுள் இடவும்)

***பரீட்சைக்கு தோற்றும் நகர எண் :***
(11 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

**நிரந்தர வதிவிட மாவட்டம் : ……………………………… அந்த மாவட்டத்தில் வதியும் வருடம்)…………………………………**

விண்ணப்பிக்கும் மாவட்டம் :

1. ……………………………………………………………

2. ……………………………………………………………

1.0. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்: திரு/திருமதி/செல்வி ……………………………………………………
முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உதா : MR.PERERA,A.B.C)

1.2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் : ……………………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

1.3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ……………………………………………………………

1.4. பால் : ( பெண் - F / ஆண் - M
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

1.5. தொலைபேசி இல. : ……………………………………………………………

2.0. 2.1. நிரந்தர முகவரி :- ……………………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி :- ……………………………………………………………
(சிங்களத்தில்/தமிழில்)

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :- ……………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.0. 3.1. தேசிய அடையாள அட்டை இல.

3.2. பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

3.3. 2020.10.08 ஆந் திகதியில் வயது,

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

4.0. கல்வித்தகைமைகள் :

4.1. க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சையின் வருடம் :………………………
II. பரீட்சை சுட்டிலக்கம் :………………………
III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2. க.பொ.த (உ/த) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சையின் வருடம் :………………………
II. பரீட்சை சுட்டிலக்கம் :………………………
III. பெறுபேறு :………………………

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

4.3 உயர் தேசிய டிப்ளோமா பற்றிய விபரம் :

I. உயர் தேசிய டிப்ளோமா : ……………………………………………
II. நிறுவனத்தின் பெயர் : ……………………………………………
III. பட்டம் பெற்ற திகதி : ……………………………………………

5.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக. ……………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………...

6.0. அரச / கிழக்கு மாகாண பொதுச்சேவையை சேர்ந்தவராயின்,

6.1. திணைக்களம் : ……………………………………………………………………………………………

6.2 தற்போதைய பதவி : ………………………………………………………………………………………

6.3. முதல் நியமனத் திகதி : ………………………………………………………………………………

6.4. இச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ……………………………………………………………

7.0. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட (தெளிவான விபரங்களுடன்) பற்றுச்சீட்டினை உரிய கூட்டினுள் கழராதவாறு இங்கு ஒட்டவும் தொடர்பான விபரங்கள்

| பற்றுச்சீட்டு மூலப்பிரதியினை கழராதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

8.0. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது / அத்துடன் எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இவ் விண்ணப்பப்படிவத்திற்கான அறிவித்தலின் 3.2 குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

(உ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

……..…...……………………

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ……………………

09.0. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 5.3 இன்படி)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………….. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், இவ் விண்ணப்பப்படிவத்திற்கான அறிவித்தலின் 3.2 குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ……………………………… ஆந் திகதியில் இட்டார் என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டு இல................................... திகதிய ........................ பிரதேச செயலகம் ....................................... இல் பணம் செலுத்தி ஒட்டப்பட்டுள்ளது நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :………………………

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப் பெயர் :…………………………….
பதவி :………………………………………………………….
முகவரி :……………………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

10.0 **திணைக்களத் தலைவரின் உறுதியுரை :** (அரச / கிழக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது)

இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி …............................................. அவா்களின் விண்ணப்பத்தை சிபாா்சு செய்து சமா்ப்பிக்கின்றேன். அவா் விண்ணபித்துள்ள பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை அப்பதவிக்கு விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………………

திணைக்களத்தலைவரின் கையொப்பம்

திகதி : ……………………………………………….
முழுப் பெயர் : ……………………………………………….
பதவி : ……………………………………………….
முகவரி :……………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)